# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 53 — 1973 මාර්තු 30 වැනි සිකුරාදා — 1973.03.30

53 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)— விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யப்படுவதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 333 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 337 | ஏலவிற்பனைகள் .. .. | — |
| ஏலவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | தாமதித்த அறிவித்தல்கள் .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### கட்டடத் திணைக்களம்

கொள்ளுப்பிட்டி, காலி வீதி, 137 ஆம் இலக்கத்திலுள்ள பழைய பொலிசுநிலயக் கட்டடத்தை விலைக்கு வாங்கி, அழித்து அகற்றுவதற்கான கேள்விகள் கொழும்பு 7, கட்டடத்திணைக்களத்திலுள்ள கொழும்புப் பகுதி கண்காணிப்பு எந்திரியின் அலுவலகத்திலிருக்கும் பகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் 1973 ஏப்பிரல் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள், கொழும்பு 7, கட்டடத்திணைக்களத்திலுள்ள கொழும்பு மேற்கு மாவட்ட எந்திரியிடம் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப்படிகளில் அனுப்பப்படல் வேண்டும். எல்லா விவரங்களையும் அவரது அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

3. கொழும்பு 1 இல் உள்ள கட்டடப் பணிப்பாளர் தலைமை அலுவலகத்திலுல் அல்லது கொழும்புக்கு வெளியே எந்தக் கச்சேரியினுலும் 1973 ஏப்பிறல் 4, புதன்கிழமை பி. ப. 2.30 மணிவரை வழங்கப்படும் ரூபா 1,000 கேள்வி வைப்புப் பணத்திற்கான பற்றுச்சீட்டை காண்பித்து கொழும்பு மேற்கு மாவட்ட எந்திரியிடம் கேள்விப்படிவங்களை உத்தேச கேள்விக்காரர்கள் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி தொகை, கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் கட்டடத்தை அழித்து எல்லாப்பொருட்களும், சிதைவுகளும் திருப்திகரமாக அகற்றப்படும் பட்சத்தில் மீளளிக்கப்படும்.

4. கேள்விகள் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு 7, கட்டடத்திணைக்களம், கொழும்பு பகுதி கண்காணிப்பு எந்திரியின் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகளைக் கொண்ட பொறியிட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் "கொள்ளுப்பிட்டி பழைய பொலிசு கட்டடத்தை வாங்கி அழித்து அகற்றுவதற்கான கேள்வி" என்று குறிக்கப்படல் வேண்டும்.

5. கேள்விகள் 1973 ஏப்பிறல் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 3.00 மணிக்குத் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் தத்துவம் பெற்ற பிரதிநிதிகள் சமூகமளித்திருக்கலாம்.

6. தேர்ந்தெடுக்கப்படும் கேள்வியாளர், கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரு மாதத்திற்குள் கட்டடத்தைத் தகர்த்து எல்லாப் பொருட்களையும் சிதைவுகளையும் அகற்றி முடிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறினுல் அவர் தமது கேள்வி வைப்புப்பணத்தை இழப்பதுடன், அரசுடனை ஒப்பந்தத்தை மீறிய ஒப்பந்தக்காரர் நிரலில் சேர்க்கப்படுவதற்கும் ஆளாவார்.

எம். குமாரசுவாமி,
கொழும்புப் பகுதி
கண்காணிப்பு எந்திரி.

த. பெ. எண். 1355,
கொழும்பு 7.

3–1137—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

### முக்கிய அறிவித்தல்

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எம். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சகத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 15 ந் உ.

### கேள்விப் பத்திர அறிவித்தல்

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு-5, நாராகேன்பிட்டி, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1973 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் தேதி புதன்கிழமை மு. ப. 10.00 மணிவரை பின்வரும் வேலைக்காக வேருன பொறியிட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

**விவரணம்.**—பலாங்கொடை புதிய சாலையில் மின் அமைப்பு வேலை.

வெரகெரையிலுள்ள மின் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய பத்திரங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்பட வேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக் கொள்வதுடன், இவரின் அலுவலகத்தில் படவரைவுகளையும் பரிசீலனை செய்யலாம். ரூபா 2,00,000 தொகைக்குக் குறையாத மின் பொறி வேலைகளுக்கு இ. போ. ச. வில் அல்லது அரசாங்க திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள், தேவையான கேள்விப் பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 200 க்கான கேள்விப் பத்திரக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டையும் மீளளிக்கப்படமாட்டாத கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 25 க்கான பற்றுச் சீட்டையும் 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பிரதம மெக்கானிக்கல் பொறியியலாளருக்கு காட்டுவதன்பேரில் கேள்வியிடத்தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வியிடுபவர்கள் தங்களது சான்றேலைகளைப் பரிசோதனைக்குக் காட்ட வேண்டும். அவ்வித சான்றேலைகள் மின் பொறியியலாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்டபின், கேள்விப் பத்திரக் கட்டுப்பணத்தை காசாக மாத்திரம் பொரலஸ்கமுவை, வெரகெரையிலுள்ள இ. போ. ச. பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டலாம்.

பிரதம மெக்கானிக்கல் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

மெக்கானிக்கல் பொறியியல் பகுதி,
வெரகெரை, பொரலஸ்கமுவை.

3-1161—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

### காணி அபிவிருத்தித் திணைக்களம்

*அரிந்த மரங்களைக் கொள்வனவு செய்வதற்கும், அகற்றிச் செல்வதற்குமான கேள்விப்பத்திரங்கள்*

கீழ்க்காணும் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள அரிந்த மரங்களைக் கொள்வனவு செய்வதற்கும், அகற்றிச் செல்வதற்குமான கேள்விப் பத்திரங்களை 1973 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 24 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிவரை காணி அபிவிருத்திப் பணிப்பாளர் ஏற்றுக்கொள்வார்.

2. வெவ்வேறு பிரிவுகளில் இருக்கும் மரங்கள் தொடர்பாக 1973 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை பெறக்கூடிய படிவங்களில் இணைப்படியில் எல்லாக் கேள்விப்பத்திரங்களும் இருக்கவேண்டும். மரங்கள் இருக்கும் காணி அபிவிருத்தி அலுவலர் பிரிவு மட்டும் இங்கே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

3. கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு, ரூபா 250 ஐ மரங்கள் இருக்கும் ஒவ்வொரு நிலையம் தொடர்பாகவும் கட்டுப்பணமாகக் கொழும்பிலுள்ள காணி அபிவிருத்தி அலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்திப் பணிப்பாளரின் 1 ஆம் இலக்கக் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி) அலுவலகத்திலோ அல்லது பிரிவுக் காணி அபிவிருத்தி அலுவலகத்திலோ அல்லது கொழும்புக்கு வெளியிலாயின் ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி அது சம்பந்தமான பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் " .....................இல் அரிந்த மரங்கள் கொள்வனவு செய்வதற்கும், அகற்றிச் செல்வதற்குமான கேள்விப்பத்திரங்கள் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு அக்கிராசனர், கேள்விச் சபை, காணி அபிவிருத்தி திணைக்களம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்ப வேண்டும். கேள்விக்காரரின் பெயரும், முகவரியும் கடித உறையின் இடது பக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அஞ்சல் மூலமாயின் பதிவு அஞ்சலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகக் காணி அபிவிருத்தித் திணைக்களப் பிரதான கணக்காளர் இடமும் கையளிக்கலாம். அப்போது ஒரு ஒப்புக்கோடற்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1973 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 24 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் அல்லது அவர்களுடைய முகவர்கள் விரும்பின் சமூகமளிக்கலாம்.

6. கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் சம்பந்தப்பட்ட காணி அபிவிருத்தி அலுவலர்களைக் கலந்தாலோசிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். கேள்விகளிலுள்ள ஏதாவது மாற்றங்கள் அல்லது அழிப்புகள் யாவும் கேள்விக்காரரால் முதலெழுத்தொப்பம் இடப்பட வேண்டும்.

7. கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொண்டது சம்பந்தமான விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து பத்து நாட்களுக்குள் இது தொடர்பான (அதாவது கேள்விக்காரர் கேட்டுக்கொண்ட தொகை) முழுவதையும் தேர்வுபெற்ற கேள்விக்காரர் செலுத்தவேண்டும். அவ்வாறு கொடுப்பனவு செய்யப்பட்ட 14 நாட்களுக்குள் அம்மரங்களை அப்புறப்படுத்த வேண்டும். தேர்வுபெற்ற கேள்விக்காரர் அதற்கான ஒழுங்குகளைத் தாங்களே செய்துகொள்ள வேண்டும். மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் மரங்களை அகற்றத் தவறின் அவைகள் திரும்பவும் விற்கப்படும் அல்லது விற்பதற்கு வேறு நடவடிக்கை எடுக்கப்படும். அப்பொழுது திருப்திகரமான காரணங்களைக் காணி அபிவிருத்திப் பணிப்பாளருக்குக் காட்டினாலன்றி அவைகளைத் தேர்வுபெற்ற கேள்விக்காரர் கோரமுடியாது. தேர்வுபெற்ற கேள்விக்காரர் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் அரசுக்கு உரிமையாக்குவதற்காகப் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது " தவறிய ஒப்பந்தகாரர் " பட்டியலில் சேர்க்கப்படுவர்.

8. கேள்விப்பத்திரங்களிற் சிலவற்றையும் அல்லது யாவற்றையும் நிராகரிக்க அல்லது ஒரு பகுதியை ஏற்க அரசுக்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

9. கேள்விப்பத்திரங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப்பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெற வேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

10. கேள்விப்பத்திரத் திகதியிலிருந்து 60 நாட்களுக்கான காலத்திற்குத் தமது விருப்பறிவிப்பைக் கேள்விக்காரர் விட்டுவைக்க வேண்டும்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்திப் பணிப்பாளருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1.

**அட்டவணை**

| பிரிவு | | நிலையம் | | அளவுகள் அரிந்த மரங்கள் வெவ்வேறு அளவுகளில் |
|---|---|---|---|---|
| மஹியங்கனை | .. | மரஅரி ஆலை கசலக | .. | 18,271·7 கன அடி |
| காலி | .. | மரஅரி ஆலை, கந்தபாங்கலை.. | | 13,156·9 கன அடி |
| மாங்குளம் | .. | மரஅரி ஆலை, கிளிநொச்சி, பிரிவுக் களஞ்சியம், மாங்குளம் | | 35,592·8 கன அடி |
| அநுராதபுரம் | .. | குருளுவேவா மரஅரி ஆலை | .. | 8,884·8 கன அடி |
| | | பதவிய மரஅரி ஆலை | .. | 27,995·2 கன அடி |

3-1104—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

### கடற்றொழில் திணைக்களம்

பின்வரும் வேலைகளுக்கான கேள்விகளை, கடற்றொழில் இயக்குநர் 73.04.19 ந் தேதி காலை 10.30 மணி வரையும் ஏற்றுக்கொள்வார்.

(1) கடற்றொழில் திணைக்கள தலைமை அலுவலகக் கட்டடங்களுக்குச் சேர்த்தலும் இரண்டு சீமெந்தி மீன் தொட்டிகளைக் கட்டுதலும்.

(2) கதவுகளையும், தொங்கற் கதவுகளையும் மாற்றி அமைத்தலும், உண்டிச்சாலைச் சமையலறையை மீளவமைத்தல்.

2. கேள்விப் படிவங்கள் கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் திணைக்களத் தாபனக் கிளையில், மீளளிப்புக்கான வைப்புப் பணம் ரூபா 100/- வுடன் 73.04.18 ந் தேதி நண்பகல் 12 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

கடற்றொழில் திணைக்களம்,
காலிமுகம்,
கொழும்பு 3, மாச்சு, 1973.

ஏ. ஐ. முகைதீன்,
கடற்றொழில் இயக்குநர்.

3-1136—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### விற்பனைக்கான வாகனங்கள்

வோக்ஸ் வேகன் கார் 3 ஸ்ரீ 1577
டொஜ் (3 தொன்) லொறி சி. எல். 5054

மேலே குறிப்பிடப்பட்ட வாகனங்களின் விற்பனைக்கான முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 1973 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 9 ம் திகதி நண்பகல் 12 மணிவரை கீழே கையொப்பமிட்டுள்ள நிதி அதிபர் பெற்றுக்கொள்வார். கேள்விப் பத்திரங்களுக்கான படிவங்களை 1973 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 6 ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னர் விநியோக அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரத்திற்கான 10 ரூபாவும் திருப்பிக் கொடுக்கப்படவுள்ள கேள்விப் பத்திர முன் பணமான 100 ரூபாவும் படிவங்களைப் பெறுவதற்கு முன்னர் கட்டப்பட வேண்டும். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் போக்குவரத்துப் பிரிவில் அலுவலக நேரங்களில் இந்த வாகனங்களைப் பார்வையிடலாம். போக்குவரத்துப் பிரிவு ரொறிங்டன் சதுக்கத்தில் இருக்கிறது.

கேள்விப் பத்திரங்கள் முத்திரையிடப்பட்ட காகிதக் கூடுகளில் அனுப்பப்படுதல் வேண்டும். காகிதக் கூடுகளின் மேல் இடது பக்கத்தில் "விற்பனைக்கான வாகனங்கள்" என்று குறிப்பிடப்படுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை நிதி அதிபர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தபால் பெட்டி இலக்கம் 574, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும், அல்லது நிதி அதிபரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் இடவேண்டும். கேள்விப் பத்திரத்திற்கான பற்றுச்சீட்டுக்களை வைத்திருப்பவர்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது பிரசன்னமாய் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். கேள்விப் பத்திரங்கள் 1973 ம் ஆண்டு சித்திரை மாதம் 10 ம் திகதி காலை பத்து மணிக்குத் திறக்கப்படும்.

நிதி அதிபர்,
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

கொழும்பு 7.
30.03.73.

3–1162—30.03.73 ந திகதிய வர்த்தமானி இல. 53

---

இலக்கம். கியூ. டி. 11/73

### பொலிசுத் திணைக்களத்திற்கு 10,000 சிகரத் தொப்பிகள் வழங்குதல்

உள்ளூரிலேயே பெற்றுக் கொள்ளக்கூடிய மூலப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட 10,000 சிகரத் தொப்பிகளை வழங்குதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1, பொலிசுத் தலைமையலுவலகத்தின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1973 ஏப்பிரல் மாதம் 24 ம் திகதி காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்களைத் திறப்பதற்காக மேலே குறிப்பிடப்பட்ட நேரத்தில் கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் சமுகமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

3. கொழும்பு 1, பொலிசுத் தலைமையலுவலகத்தில், பொலிசுத் தலைவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் படிவங்களில் கேள்விப்பத்திரங்கள் அளிக்கப்பட வேண்டும். மாதிரி (சாம்பிள்) சிகரத் தொப்பிகளை சாதாரண அலுவலக நேரங்களில் கொழும்பு 1, பொலிசுத் தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

4. கேள்விப்பத்திர கட்டுப்பணமாக ரூ 250/- செலுத்தி அதற்குரிய சிட்டையைக் காட்டி 1973 ஏப்ரல் மாதம் 23 ம் திகதி மத்தியானம் 12.00 மணிவரை கேள்விப்பத்திர விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கட்டுப்பணத்தைப் பொலிசுத் தலைமையலுவலகத்திலாயினும் அல்லது கொழும்புக்கு வெளியே உள்ள எந்தக் கச்சேரியிலாயினும் செலுத்தலாம்.

5. மாதிரிகள் (சாம்பிள்) சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவை கேள்விப் பத்திரங்கள் திறப்பதற்கான நேரத்திற்கு முன்னரே கேள்விப்பத்திர விண்ணப்பதாரரின் பெயர், விலாசம் இடப்பட்டு பொலிசுத் தலைமையலுவலகத்தில் கையளிக்கப்படல் வேண்டும்.

6. மேற்கொண்டு விபரங்களை பொலிசுத் தலைவரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஜீ. புஞ்சிமஹத்மயா,
பொலிசுத்தலைவருக்காக.

பொலிசுத் தலைமை அலுவலகம்,
கொழும்பு-1.
1973.03.19.

3–1202—30.03.73 ந திகதிய வர்த்தமானி இல. 53

---

இலக்கம். கியூ. டீ. 81/72

### கேள்விப்பத்திர முடிவுகள்—பொலிசுத் திணைக்களம்

5000 மழைக் கோட்டுகள் வழங்குதல்—முடிவு திகதி 27.12.1972

1972 டிசம்பர் மாதம் 01 ம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியால் அறிவிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பத்திரங்கள் சம்பந்தமாக 5 கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்களால் மொத்தம் 8 விலைகள் சமர்ப்பிக்கப்பட்டன. தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பதாரரின் விபரம் பின்வருமாறு :

எஸ். எல். எம். கவுஸ் அன்ட் கம்பனி, 115, 3 ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை மழைக்கோட்டு ஒன்றுக்கு ரூ.66.95.

ஜீ. புஞ்சிமஹத்மயா.
பொலிசுத் தலைவருக்காக.

பொலிசுத் தலைமை அலுவலகம்,
கொழும்பு-1,
1973 மார்ச்சு மாதம் 20 ம் திகதி.

3–1201—30.03.73 ந திகதிய வர்த்தமானி இல. 53

---

### திரைப்படங்களைக் காட்டும் பொருட்டு இரத்மலானை கொத்தலாவலைபுரத்தில் உள்ள புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான "பிரச்சா சலவின்" குத்தகை

திரைப்படங்களைக் காட்டும் நோக்கத்திற்கென இரத்மலானை கொத்தலாவலைபுரத்தில் அமைந்துள்ள மேற்கூறப்பட்ட கட்டடத்தை குத்தகைக்கு எடுப்பதற்கு திரைப்படச்சாலைகளைச் சொந்தமாக வைத்திருக்கும் இலங்கை வாசிகளிடமிருந்தும் உள்நாட்டுத் திரைப்படக் கம்பனிகளிடமிருந்தும் மாத்திரம் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. இக்கட்டடத்தின் குத்தகை பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டிருப்பதுடன் இலங்கை அரசினர் புகையிரதப் பகுதிப் பொது முகாமையாளருடன் பல கட்சிகளை உட்கொண்ட ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ளும் பொருட்டுத் தெரிவு செய்யப்படும். இதற்கு கேள்விப் பத்திரக்காரர்கள் இணங்கிக் கொள்ளவேண்டும்.

பிரதான நிபந்தனைகளாவன :—

அ. மாதமொன்றுக்கு 1,250/- ரூபாவிற்குக் குறையாத கூலியை கேள்விப் பத்திரக்காரர் கோருவதுடன் இத்தொகை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆ. பொருத்தமான பல கட்சிகளை உட்கொண்ட ஒப்பந்தம் ஆரம்பத்தில் இரு வருடங்களுக்குச் செல்லுபடியானதாகவிருக்கும். எனினும் இக்காலவெல்லை புகையிரதத் திணைக்களப் பொது முகாமையாளரின் விருப்புரிமையின் பிரகாரம் நீடிக்கப்படும்.

இ. தெரிவு செய்யப்படும் கேள்விப் பத்திரக்காரர் இரு மாத வாடகையுடன் 5,000/- ரூபாவைத் திணைக்களத்தில் வைப்பில் இடவேண்டும்.

ஈ. புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளரினால் பணிக்கப்பட்ட தொகைக்கு தீ விபத்திற்கெதிராக பிரச்சா சலவிற்குச் சொந்தமான சொத்துக்களை அவர் காப்புறுதி செய்ய வேண்டும்.

உ. உள்ளூர் அதிகார சபைகளுக்குச் செலுத்தப்படவேண்டிய சகல கொடுப்பனவுகளை அவர் தீர்த்து வைப்பதுடன் நுகரப்பட்ட மின்சக்தியின்பொருட்டான கொடுப்பனவுகளையும் செலுத்த வேண்டும்.

ஊ. மேலும் அவசியம் ஏற்படும்போது திணைக்களத் தேவைகளுக்கென பிரச்சா சல விடுவிக்கப்பட்டு கிடைக்கும்படி செய்யப்படவேண்டும்.

எ. இதைத் தவிர ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டுள்ள பல கட்சிகளை உட்கொண்ட ஒப்பந்தத்திலும் கையொப்பமிடல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட ஒரு நிபந்தனை அல்லது பல நிபந்தனைகளை மீறுதல் குத்தகையினை இரத்துச் செய்வதற்கு ஏதுவாக அமையும்.

3. கேள்விப் பத்திரங்களை அளிக்கவிருப்பவர்கள் காணி உத்தியோகத்தர்களிடமிருந்து தேவையான படிவங்களை 6.4.73 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டும். புகையிரதத்

திணைக்களப் பிரதம கணக்காளரிடம் 10 ரூபாவை வைப்பில் இட்டுப் பெறப்படும் பற்றுச் சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் இப்படிவங்கள் வழங்கப்படுகின்றன.

கேள்விப் படிவம் உரிய முறையில் நிரப்பப்பட்டு கடிதவுறையின் மேற்பக்க மூலையில் "பிரச்சாசலவிற்கான கேள்விப் பத்திரம்" என எழுதப்பெற்று தலைமைக் கணக்காளர் இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி. அ. பெ. 370. கொழும்பு 10 என்னும் முகவரிக்கு 23.04.73 ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அல்லது கையளிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

4. இதற்கான கேள்விப் பத்திரச் சபை புகையிரதத் திணைக்கள உதவிப் பிரதம பொறியியலாளரையும் காணி உத்தியோகத்தரையும் கொண்டிருப்பதுடன் இது சம்பந்தமாக எழும் சகல விடயங்கள் மீதும் இலங்கைப் புகையிரதத் திணைக்களப் பொது முகாமையாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகவிருக்கும். காரணங்களை எடுத்துக்காட்டாமல் ஒரு கேள்விப் பத்திரத்தை ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது சகல கேள்விப் பத்திரங்களையும் நிராகரிப்பதற்குமான உரிமை புகையிரதத் திணைக்களப் பொது முகாமையாளருக்கு உண்டு.

வி. ரி. நவரட்ன,
பொது முகாமையாளர்,
இலங்கை புகையிரதப்பகுதி.

அஞ்சல் பெட்டி இல. 355,
கொழும்பு 10,
30 மாச்சு, 1973.

3–1246—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

## ஜயசூரியவத்த மனையை உடைத்து வெளியே அகற்றல் பொருட்டு விற்பனை கூறுவிலைகள்

புத்தளம் மாவட்டம், நாத்தாண்டிய காரியாதிகாரி பிரிவின் ஜயசூரிய வத்தயில் உள்ள மனையை விற்று உடைத்து வெளியே அகற்றும் பொருட்டு 1973.4.24 ம் திகதி காலை 10.00 மணி வரை புத்தளம் கச்சேரி கேள்விச்சபைத் தலைவரால் கூறுவிலைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேற்படி மனையை 1973.4.10 ம் திகதி தொடக்கம் 1973.4.21 ம் திகதி வரை பார்வை இடலாம்.

1973.4.26 ம் திகதி மாலை 3.00 க்கு கூறுவிலை விண்ணப்பங்கள் திறக்கப்படும்போது விண்ணப்பக்காரர் அங்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படும்.

1973.4.23 ம் திகதி மு.ப. 12.00 மணி வரை பதிவு செய்யப்பட்ட கொந்திருத்துக்காரர்களுக்கும், கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புத்தளம் கச்சேரியில் கூறுவிலை படிவம் கொடுக்கப்படும்.

விண்ணப்பக்காரரால் புத்தளம் கச்சேரியில் அல்லது வேறு கச்சேரியில் அல்லது திறைசேரியில் மேற்படி வேலையின் பொருட்டு திருப்பிக் பெறக் கூடிய கட்டுப்பணமாக ரூபா 25 கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை புத்தளம் அரசாங்க அதிபரிடம் காட்டியபின்னரே கூறுவிலை படிவம் கொடுக்கப்படும். மேற்படி பெற்றுக் கொண்ட படிவத்தில் மட்டுமே கூறு விலைகள் சமர்ப்பிக்க வேண்டும்.

உடன்படிக்கை கைச்சாத்திடமுன் ரூபா 250 ஏமப்பணமாக (பிணை) கட்டவேண்டும். புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பக்காரர் 3 தினங்களுக்குள் ஏமப்பணத்தையும் முழுத் தொகையையும் அரசாங்க அதிபரிடம் கட்டி ஒப்பந்தம் கைச்சாத்திட்ட 30 தினங்களுக்குள் கட்டிடத்தை உடைத்து வெளியே அகற்றவேண்டும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் கட்டிடத்தை உடைத்து வெளியே அகற்றுவிட்டால் ஏமப் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. மெழுகிட்ட கூறுவிலைப் பத்திரத்தை புத்தளம் கச்சேரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் இடலாம் அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் குறிக்கப்பட்ட திகதிக்கு முன் அனுப்பப்பட வேண்டும். பதிவுசெய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்படும் கூறுவிலைப் பத்திரங்களின் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "ஜயசூரியவத்த மனை விற்று, உடைத்து வெளியே அகற்றல்" என்று குறிப்பிட்டு புத்தளம் கச்சேரி கேள்விச் சபைத் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும்.

பா. சு. விஜயவீர,
அரசாங்க அதிபர்,
புத்தளம்.

புத்தளம் கச்சேரி,
1973 ம் ஆண்டு மார்ச்சு மீ 10 ந உ.

3–1074—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53.

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு-5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 தேதி மு. ப. 10.00 மணிவரை பின் வரும் வேலைகளுக்கான வேறான பொறியிட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

| விவரணம் | ஒப்பந்தகாரர்களின் ஆகக் குறைந்த பதிவுத் தொகை |
|---|---|
| 1. மகரகமைச் சாலை— 5 வேலைக் குடாக்களும் 2 சேவைக் குழிகளும் அமைத்தல் ஈசி/493 | 1,00,000.00 |
| 2. களுத்துறைச் சாலை-கட்டடங்கள், வீதிகள் கால்வகள் அமைத்தல்-ஈசி/538 | 1,50,000,00 |
| 3. மதவாச்சி-இடத்தை அகழ்தலும் மட்டமாக்குதலும்—ஈசி/417 | 35,000.00 |

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்படவேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக் கொள்வதுடன் இவரின் அலுவலகத்தில் படவரைவுகளையும் பரிசீலனை செய்யலாம். ஒவ்வொரு வேலைக்கும் எதிராகக் காட்டப்பட்ட தொகைக்காக இ. போ. ச. வில், அரசாங்கத் திணைக்களங்களில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள், தேவையான கேள்விப் பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக 1 ஆம், 3 ஆம் விடயங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூபா 100/- க்கும், 2 ஆம் விடயத்துக்கு ரூபா 200/- க்கும் மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பத்திரக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டையும், மீளளிக்கப்படமாட்டாத கேள்விப்பத்திரக் கட்டணமாக 1 ஆம், 3 ஆம் விடயங்களுக்கு ரூபா 25/- க்கும், 2 ஆம் விடயத்துக்கு ரூபா 40/- க்குமான பற்றுச்சீட்டையும் 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது முன்னதாக பிரதம சிவில் பொறியியலாளருக்கு காட்டுவதன் பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள்.கேள்வியிடுபவர்கள் தங்களது சான்றோலைகளைப் பரிசோதனைக்குக் காட்ட வேண்டும். அவ்விதம் சான்றோலைகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே கேள்விப் பத்திரக் கட்டுப்பணத்தை காசாக மாத்திரம் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டலாம்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு-5.

3–1242—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

## அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

24 ஸ்ரீ 1600 இலக்கமுடைய "ஸ்ரயர் பென்ஸ்" லொறியும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள 44 ஸ்ரீ 1465 இலக்கமுடைய ரெயிலரும் விற்பதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 24.4.73 பி. ப. 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 23.4.73 மத்தியானம் 12.00 மணிவரை வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்க விரும்புவோர் இவ்வாகனத்தை ஊறுகொடவத்தையிலுள்ள மரக்காலை உத்தியோகத்தரின் அனுமதியுடன் வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

கேள்விப் பத்திரங்களும் அதற்கான நிபந்தனைகளும் செயல் முறை முகாமையாளரிடமிருந்து திரும்பப் பெறக்கூடிய கட்டுப் பணமாக ரூபா 100/- ம் திரும்பப் பெற முடியாத கேள்விப்பத்திரப் பணமாக ரூ. 10/- ம் கட்டி பெற்றுக்கொள்ளலாம்.

வேறு விபரங்களும் செயல் முறை முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்.

7, வஜிரு லேன்,
கொழும்பு-5,
21.03.73.

3–1241—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

**கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்**

அறிவித்தல்

பின்வரும் விபரக் கூற்றுக்களுடைய கட்டுநூலை வழங்குவதற்கு உள்ளூர் நூல் உற்பத்தியாளர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன.

*விபரம்.*—தன்னியக்கமுள்ள பேலர் இயந்திரங்களைப் பாவித்து வைக்கோல் கட்டுவதற்கு உகந்த கட்டு நூல். நூல் துப்பரவாக இருக்க வேண்டும். அத்துடன் நூலிற்குப் பாவிக்கப்பட்டுள்ள நார்ப் பொருள் இயந்திரத்தின் தாக்கத்தை தாங்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

*தொழில் நுட்ப விபரக் கூற்று.*—றுத்தல் ஒன்று 225 அடி. சராசரி விறைப்பாக்கப்படும் பலம்—325 றுத்தல். புழுக்கள் தாக்காதவாறு நூல் பதனிடப்பட்டிருக்க வேண்டும். நூல் சுற்றி வைக்கும் வட்டின் விட்டம் 10" ஆக இருக்க வேண்டும்.

*ஆண்டொன்றிற்கான தேவை.*—ஒவ்வொரு வட்டும் 18 லிருந்து 20 றுத்தல் வரை நிறையுள்ள 8,000 வட்டுக்கள்.

"கட்டு நூலுக்கான கூறுவிலைகள்" எனக் குறிப்பிட்டு மாதாந்தம் எவ்வளவு தொகை வழங்க முடியும் என்ற விபரத்தையும் தெரிவித்தும் நூலின் மாதிரிகளுடன், 1973 ஏப்ரல் 10 ம் திகதி பி. ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக கூறுவிலைகள் இதன் கீழுள்ள விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1973.03.14.

3–1231—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

4 இ. க. சதுரத் தகரங்கள். 36 இரு. சதுரத் தகரங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கான கேள்வி

மேற்கூறியவற்றை வழங்கிக் கொள்வதற்கான கேள்விகள், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள்விச் சபைத் தலைவரினல் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி நிபந்தனைகளை பண்டசாலை வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் இருந்து, மீளளிக்கப்படும் காசு வைப்பாக ரூபா 100 கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் 1973 ஏப்ரல் 19 ஆந் தேதி காலை 10 மணியுடன் முடிவடையும்.

பண்டசாலை வழங்கல் முகாமையாளர்.

113, காலி வீதி,
கொழும்பு 3.

3–1232—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

ஏல விற்பனை

சில பெரிய வெள்ளை இனப் பன்றிகளும் பன்றிக் குட்டிகளும் சித்திரை மாதம் 10 ம் திகதி காலை 10 மணியளவில் கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். விலைப்பட்ட மிருகங்கள் ஏலத்தின் பின் உடனடியாக அகற்றப்படல் வேண்டும். மிருகங்களை கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலையில் கிழமை நாட்களில் சாதாரண அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

க. தங்கராஜா,
சிறைச்சாலை அதிபர்.

திறந்த வெளிச்சிறைச்சாலை,
கோப்பாய்.
10.3.73.

3-1133—30.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 53

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விளம்பரதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மார்ச் | .. | 2.3.73 | வெள்ளி | .. | 21.2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 9.3.73 | வெள்ளி | .. | 28.2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 16.3.73 | வெள்ளி | .. | 7.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 23.3.73 | வெள்ளி | .. | 14.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 30.3.73 | வெள்ளி | .. | 21.3 73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| ஏப்பிறில் | .. | 6.4.73 | வெள்ளி | .. | 28.3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 11.4.73 | புதன் | .. | 4.4.73 | புதன் | . | ந.ப. 12.00 |
| | | 19.4.73 | வியாழன் | .. | 11.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 27.4.73 | வெள்ளி | .. | 18.4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யு. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சகத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் வெ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.